# விருத்தாசலம் நகராட்சி
# மன்ற கூட்ட அழைப்பிதழ்

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 06.07.2026 திங்கள் கிழமை அன்று பிற்பகல் 3.05 மணிக்கு அவசரக்கூட்டம் விருத்தாசலம் நகராட்சி அலுவலக நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறும், அதற்கான மன்றப்பொருள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள், தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
விருத்தாசலம் நகராட்சி.

**பொருள் எண்.1**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான காட்டுகூடலூர் ரோட்டில் உள்ள தினசரி காய்கறி மார்சகட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு கீழ்கண்ட விபரப்படி கடை ஒன்றுக்கு டேவணித்தொகை செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

**குத்தகை இனங்களின் பட்டியல்**

| வ. எண் | பிளாக் | கடை விவரம் | மொத்த கடை | கடை எண் | அளவு | கடை ஒன்றுக்கு செலுத்த வேண்டிய டேவணித் தொகை (கேட்பு வரைவோலையாக (DD) மட்டும்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | A | ஷட்டர் ஷாப் ( மேற்கு பார்த்த கட்டிடம் முன்புறம்) | 17 | 1 முதல் 17 வரை | 10 x10 | 5,00,000 |
| | | ஷட்டர் ஷாப் ( மேற்கு பார்த்த கட்டிடம் பின்புறம்) | 6 | 139 முதல் 144 வரை | 10 x10 | 2,00,000 |
| 2 | B | ஷட்டர் ஷாப் | 40 | 109 முதல் 154 வரை | 16x 10 | 4,00,000 |
| 3 | C | ஷட்டர் ஷாப் | 108 | 1 முதல் 108 வரை | 10x 10 | 3,00,000 |
| 4 | D | திறந்த நிலை இறைச்சி கடை | 7 | 155 முதல் 161 வரை | 8x 8 | 2,50,000 |
| | | திறந்த நிலை இறைச்சி கடை ( தெற்கு பார்த்த கட்டிடம் ) | 12 | 1 62முதல் 173 வரை | 8x 8 | 2,50,000 |
| 5 | E | திறந்த நிலை கடை ( கிழக்கு பார்த்த கடைகள்) | 18 | S1 முதல் S18 வரை | 6x 8 | 1,00,000 |

மேற்படி கடைகளுக்கான செலுத்த வேண்டிய டேவணித் தொகை நிர்ணயம் செய்யப்பட்டதில், காய்கறி சங்கத்திலிருந்து வரப்பெற்ற கோரிக்கையினை அடிப்படையிலும், முன்பு நிர்ணயம் செய்யப்பட்ட டேவணித்தொகை அடிப்படையிலும் கீழ்கண்ட விபரப்படி டேவணித்தொகையினை மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பிளாக் | கடை விவரம் | மொத்த கடை | கடை எண் | அளவு | கடை ஒன்றுக்கு செலுத்த வேண்டிய டேவணித் தொகை (கேட்பு வரைவோலையாக (DD) மட்டும்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | A | ஷட்டர் ஷாப் ( மேற்கு பார்த்த கட்டிடம் முன்புறம்) | 17 | 1 முதல் 17 வரை | 10 x10 | 4,00,000 |
| | | ஷட்டர் ஷாப் ( மேற்கு பார்த்த கட்டிடம் பின்புறம்) | 6 | 139 முதல் 144 வரை | 10 x10 | 1,50,000 |
| 2 | B | ஷட்டர் ஷாப் | 40 | 109 முதல் 154 வரை | 16x 10 | 2,50,000 |
| 3 | C | ஷட்டர் ஷாப் | 108 | 1 முதல் 108 வரை | 10x 10 | 2,00,000 |
| 4 | D | திறந்த நிலை இறைச்சி கடை | 7 | 155 முதல் 161 வரை | 8x 8 | 1,50,000 |
| | | திறந்த நிலை இறைச்சி கடை ( தெற்கு பார்த்த கட்டிடம் ) | 12 | 1 62முதல் 173 வரை | 8x 8 | 1,50,000 |
| 5 | E | திறந்த நிலை கடை ( கிழக்கு பார்த்த கடைகள்) | 18 | S1 முதல் S18 வரை | 6x 8 | 50,000 |

**ஏல நிபந்தனைகள்**

1. ஏலம் எடுத்த குத்தகைதாரர் மாதாந்திர வாடகையில் 12 மாத வாடகை தொகையினை முன் பணமாக ஏலம்/ஒப்பந்துபுள்ளி உறுதி செய்யப்பட்டவுடன் செலுத்தப்படவேண்டும்
2. குத்தகை ஏலத்தில் கலந்துக்கொள்வோர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி, எவ்விதமான வாடகை (அ) குத்தகை பாக்கி மற்றும் உரிமக்கட்டணம் பாக்கிகள் எதுவும் நிலுவையில் இருக்ககூடாது. அவ்வாறு நிலுவை இருப்பின் உரிய தொகையினை செலுத்திய பின்னர் ஏலத்தில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்படும்.
3. குத்தகையினை நிர்வாக அதிகாரி விருப்பத்தின்படி ஏலத்தை முன், பின் நடத்தலாம். ஏலம் நடக்கும் காலத்திலோ அல்லது குத்தகை அமுலில் இருக்கும் காலத்திலோ இந்த ஏல விளம்பரத்தில் கண்ட நிபந்தனைகளை மாற்றவோ அல்லது

எடுத்துவிடவோ நிர்வாக அதிகாரிக்கு முழு அதிகாரமுண்டு. இந்த ஏலத்தை ஊர்ஜீதம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

4. ஏலம் அல்லது குத்தகை சம்பந்தமாக எழுப்பபடும் சந்தேகங்களுக்கும், அர்த்தங்களுக்கும், பொருட்களுக்கும் அல்லது வாசகங்களுக்கும், நிர்வாக அதிகாரியால் தெரிவிக்கப்படும் விளக்கமே இறுதியானதாகும்.
5. அரசாணை (2ப) எண்.66–ல் குறிப்பிட்டுள்ள ஏலநிபந்தனைகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும்.
6. கூடுதல் விபரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்.
7. நிர்வாக காரணத்திற்காக ஏலத்தேதியை ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
8. பொதுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரவேண்டும்
9. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.49314/2025 தீர்ப்பின் படியும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 316–11–ன் படியும் உரிய நபர்களுக்கு மட்டும் உட்புறத்தில் உள்ள கடைகளில் முன் உரிமை அளிக்கப்படும்.

ந.க.எண். 2071/2025/அ2.

அலுவலக குறிப்பு.– மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.2</u>**

விருத்தாசலம் என்ற நமது ஊர் தூய தமிழில், தேவாரப் பாடல்களில், "திருமுது குன்றம்" என்று குறிப்பிடப்படுகிறது. திரு என்றால் மேன்மை பொருந்திய, முது என்றால் பழமையான, குன்றம் என்றால் குன்றை குறிப்பதாகும் அதுவே "திருமுது குன்றம்" என இவ்வூருக்கு பெயராக இருந்தது. சைவப் புனிதர்களான அப்பர், ஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் காலத்தில், இவ்விடம் தமிழில் "திருமுது குன்றம்" (பழமலை) என்று அழைக்கப்பட்டது, பின்னர் விஜயநகர காலத்தில் சமஸ்கிருத வடிவமான விருத்தாச்சலம் என மாற்றப்பட்டது எனவே விருத்தாசலம் எனும் இந்த ஊரின் பெயரினை திருத்தம் செய்து தூய தமிழில் "திருமுது குன்றம்" என்று பெயரிட தமிழ்நாடு அரசினை கேட்டுக்கொள்ளலாம் என்ற தீர்மானத்தினை மன்றத்தில் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்0380/2026 /F1)

**<u>பொருள் எண்.3</u>**

விருத்தாசலம் நகராட்சி பூதாமூர் கிராமம், வார்டு.**F,** பிளாக்.32, ந.அ.எண். 33/3 (பழைய புல எண். 110/4,5,6,7,8,9,110/11, ந.அ.எண். 32/7 (பழைய புல எண். 109/6A), ந.அ.எண். 33/6 (பழைய புல எண். 110/10, 110/9, 110/20), ந.அ.எண்.32/17B (பழைய புலஎண். 109/4 ), 110/12, 110/15,16,17), –ல் அமையும் ஏக்கர் 1–87 செண்ட் 7760.00 ச.மீ பரப்பளவு நிலத்தினை முழுமைத்திட்டத்தில் விவசாய பகுதி பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு நில உபயோகப் பகுதியாக நில பயன் மாற்றம் செய்ய மனுதாரர் திரு. R. ரமேஷ் த/பெ ரங்கராஜ், 3/28A, பிள்ளையார் கோயில் தெரு, ஆவினங்குடி கிராமம், திட்டக்குடி என்பவர்கள் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி, இடம் விருத்தாசலம் நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோகப் பகுதியாக உள்ளது. எனவே நில உபயோகம் மாற்றம் தொடர்பாக அரசின் ஒப்புதல் பெற, பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் அளிப்பதாக இருந்தால் 30 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக ஆணையர், விருத்தாசலம் நகராட்சி, அவர்களுக்கு தெரிவிக்கக்கோரி கடந்த 03.02.2026 அன்று மக்கள் குரல் தமிழ் நாளிதழிலும் மற்றும் டிரினிட்டி மிரர் (Trinity Mirror) என்ற ஆங்கில நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்கண்ட நிலப்பயன்பாடு மாற்றம் தொடர்பாக விளம்பரம் செய்யப்பட்டு 30 தினங்கள் கடந்த நிலையில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, மேற்கண்ட விவசாய உபயோக பகுதியாக உள்ள நிலத்தின் பயன்பாட்டினை குடியிருப்பு நில உபயோகப் பகுதியாக நில பயன் மாற்றம் செய்திட அரசுக்கு உரிய பிரேரனைகள் சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்0380/2026 /F1)

நகர்மன்றத்தலைவர்
விருத்தாசலம் நகராட்சி